DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.253/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW1 (LW1)
Defence

Name : Mohandass

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 05th March 2026

எதிரிக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

முதண்மை விசாரணை

நான் தற்போது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.02.2025 அன்று நான் கோட்டக்குப்பம மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக பணியிலிருந்தேன். அப்போது ஆய்வாளர் மீனா தலைமையில் அவருடன் நானும் த.கா.பாண்டியன்

ஆகியோருடன் வானூர் டூ மயிலம் ரோடு ரங்கநாதபுரம் ஜங்ஷன் வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது பிஒய்.01 ஏஇசட் 4365 என்ற Hero honda Splendor plus இருசக்கர வாகனத்தை நிறுத்தி விசாரிக்க முற்பட்டபோது அதை ஓட்டிவந்த நபர் தப்பி செல்ல முயன்றபோது நாங்கள் அவரை மடக்கி பிடித்தோம். அவர் இவ்வழக்கின் எதிரி செந்தில் குமார் ஆவார். அவர் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது மதுபானங்கள் courier Nepolean Brandy 180 ml – 29 பாட்டில்கள் இருந்தது. அதில் 3 பாடடில்கள் மூடி திறந்து மூடிய நிலையில் இருந்தது- மேற்படி பாட்டில்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் ஆகியவைகளை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் என் கையொப்பம் 2வதாக உள்ளது. சாட்சி பாண்டியன் கையொப்பம் 1வதாக உள்ளது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.1** ஆகும். மேற்படி கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தின் நான்கு புகைப்படங்கள் அ.சா-ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றப்பட்ட courier Nepolean Brandy 180 ml – 29 பாட்டில்களின் புகைப்படங்கள் **அசா.ஆ.3 ஆகும்.** பின்பு ஆய்வாளர் எதிரி மற்றும் கைப்பற்றுதல் மகசருடன் நிலையம ் வந்து நிலைய குற்ற எண்.31/2025 பிரிவுகள் 4(1)(a), 4(1)(h) TNP Act 4(1)(C), 4(1)(A), 14(A) TNP Amendment ACt எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றும் அதன் பதிவெண்ணையும் ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி ஓடடி வந்த வாகனத்தை யார் சோதனை செய்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரி பாண்டிச்சேரி மதுபானங்களை வாகனத்தில் எந்த இடத்தில்வைத்து எடுத்துவந்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால்

சரிதான். எதிரி மேற்படி மதுபானங்களை பையில் எடுத்து வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த பையை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் அதிக மக்கள் கூடும் சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக எனது ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

படிவம் 91ல் சாட்சிகளின் கையொப்பத்தில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எதிரி எந்த மதுபானங்களையும் எடுத்து வரவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எனது ஆய்வாளர் தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு தற்போது தவறாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- என்.பிரீத்தி,

நீதித்துறை நடுவர்,

வானுார்.